IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 72/2023

Deposition of Witness : PW 1

Name : பாஞ்சாலையம்மாள் (வயது – 68)

Father's Name /W/o : க/பெ சுப்பிரமணி

Calling : –

Address : புத்தூர் (ஈடிகா பள்ளி)

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 16.07.2026.

## குறுக்கு விசாரணை

1. என் தந்தை இறந்த பிறகு தாவா சொத்தை அவர் பிள்ளைகள் சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். என் சகோதரர்கள் மற்றும் நான் 08.06.2009 ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் ஆம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். **மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் அசல் பி.சா.ஆ – 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பி.சா.ஆ – 4 இல் நான் கைநாட்டு போட்டுள்ளேனா என்றால் ஆம். பி.சா.ஆ – 4 பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதியள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். எனக்கும் என் சகோதரர்களுக்கு 2009 ஆம் ஆண்டிலேயே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றாலும் அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ – 4 பாகப்பிரிவினை அடிப்படையில் சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி அவர்களுக்கு வந்த பாகத்தை அவர்அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். சிவலிங்கம் மற்றும் ராமலிங்கம் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

2. 2 முதல் 4 பிரதிவாதிகள் ராமலிங்கத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். ராமலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 5 முதல் 7 பிரதிவாதிகள் சிவலிங்கத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். சிவலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தான் 5 முதல் 7 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனவே பி.சா.ஆ – 4 பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.